தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

இரண்டாம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

மே, சூன் - **2015**

**C031** தமிழகப் பண்பாட்டு வரலாறு

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. திருவள்ளுவர் குறிக்கும் இசைக் கருவிகள் யாவை?
2. மருந்து நூல்களில் ஒன்றினைக் கூறுக.
3. பிற்கால நீதிநூல்கள் இரண்டினைக் கூறுக.
4. திருவாய்மொழியைப் பாடியவர் யார்?
5. பௌத்த இலக்கண நூல் எது
6. சமணமும் பௌத்தமும் எந்த மதத்திற்கு எதிர்ப்பாக எழுந்தன?
7. பிரபத்தி என்பது யாது?
8. சீறாப் புராணத்தை இயற்றியவர் யார்?
9. நாயக்கர் காலத்தில் நாடாண்ட அரசியர் இருவரைக் குறிப்பிடுக.
10. வ.உ.சி. அன்னிய ஆட்சியை எதிர்க்க என்ன செய்தார்?
11. தென்னாப்பிரிக்காவில் காந்தி நடத்திய போராட்டத்தில் பங்கேற்ற தமிழ்ப் பெண்மணி யார்?
12. சிற்றூர்ப் பண்பாட்டைக் காப்பாற்றி வருபவர் யார்?
13. தமிழர் பண்பாட்டின் வீழ்ச்சிக்குரிய மூன்று ஆசைகள் என்னென்ன?
14. வள்ளலார் என்றழைக்கப்படுபவர் யார்?
15. முதற் கற்கோயிலைக் கட்டிய பல்லவ மன்னன் யார்?

## பிரிவு - 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. கள்ளுண்ணாமையைப் பற்றித் திருவள்ளுவர் கூறுவதென்ன?
2. சிறுவர்களுக்கான நீதி நூல்கள் – சிறு குறிப்பு தருக.
3. சமண மதத்தின் கொள்கைகள் யாவை?
4. கல்வெட்டின் எழுத்துமுறை பற்றிச் சிறு குறிப்பு வரைக.
5. அன்றைய தேவர் அடியார்கள் நிலை எவ்வாறு அறியப்படுகிறது?
6. அரசர்களின் குலமும் சிறப்பும் கல்வெட்டுகளால் எவ்வாறு அறியப்படுகின்றன?
7. ஐரோப்பியர் பண்பாடு செய்த நன்மைகள் என்ன?
8. களப்பிரர் – குறிப்பு வரைக.

## பிரிவு - 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) தமிழக வரலாற்றை முற்காலம், இடைக்காலம், பிற்காலம் என மூன்று பகுதிகளாகப் பிரித்து ஆராய்க.

(அல்லது)

(ஆ) எட்டுத்தொகை நூல்கள் தமிழர் பண்பாட்டினை எடுத்துரைக்கும் விதம் பற்றி விரிவாக எழுதுக.

2. (அ) சிலப்பதிகாரமும், மணிமேகலையும் தோன்றிய காலத்தில் தமிழர் பண்பாடு எந்த நிலையில் இருந்தது என்பதை விளக்குக.

(அல்லது)

(ஆ) நாயன்மார்களும், வைணவப் பெரியார்களும் வளர்த்த பண்பாடு பற்றி ஒரு கட்டுரை வரைக.

3. (அ) நாயக்கர் காலத்திய சமயம், கலை வளர்ச்சி ஆகியவற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழக விடுதலை இயக்க விடிவெள்ளிகள் என்று கூறப்பெறும் பெருமைக்கு உரியவர்கள் யாவர்? அவர்களுள் எவரேனும் நால்வர் ஆற்றிய நாட்டுத் தொண்டினை விவரிக்க.

***